[2003 ஏப்ரல் 8

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை.

வினா எண் 213, திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்.

**213—**

**வனத் துறையின் அனுமதி**

***19093—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனியில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு வனத் துறைக்குச் சொந்தமான இடத்தை ஒதுக்கீடு செய்வதற்கு வனத் துறையின் அனுமதி பெற அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

வனமற்ற பிற வேலைக்கு வனநிலம் பயன்படுத்தப்பட வேண்டுமெனில், வனப்பாதுகாப்புச் சட்டம் 1980-ன் படி, மத்திய அரசின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். தேனி நகரில் புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்காக, தேனி வனக்கோட்டம், வால்கரடு காப்புக்காட்டுப் பகுதியிலிருந்து 9 ஏக்கர் வனநிலத்தை தேனி அல்லிநகரம் நகராட்சிக்கு வழங்குவதற்காக, வனப்பாதுகாப்புச் சட்டம், 1980, பிரிவு 2-ன்படி மைய அரசின் ஒப்புதலைப் பெற, முதன்மை தலைமை வனப்பாதுகாவலரிடமிருந்து பெறப்பட்ட கருத்துரு, மைய அரசுக்கு அனுப்பப்பட்டு, அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். விவா அறிக்கையினைப் படித்தேன். தேனி மாவட்டம் தலைநகரமாக விளங்குவதாலும், தமிழகத்திலே கோயம்புத்தூருக்கு அடுத்தபடியாகத் தொழில் நகரமாக விளங்குவதாலும், ஏற்கெனவே

2003 ஏப்ரல் 8]

அமைந்துள்ள பேருந்து நிலையம் மிகவும் மோசமான நிலையில் நெரிசலாகவும் உள்ளது. இதனைத் துரிதமாக மாற்றுவதற்கு வனத் துறைக்குச் சொந்தமான 9 ஏக்கர் நிலத்தினைக் கோரி மத்திய அரசின் ஒப்பதலுக்கு அனுப்பியுள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ளார்கள். தேனியில் நெரிசலான நிலையைப் போக்குவதற்குத் துரித நடவடிக்கை எடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் அரசு துரித நடவடிக்கை எடுத்து, அவருடைய தேவையைப் பூர்த்தி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. தகவல் கோரல்

### (அ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன் என்ன?

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு பிரச்சினைகளைத் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வழக்கம்போல் அறையில் வந்து கேளுங்கள் என்று சொல்லாமல் தாங்கள் இங்கேயே எங்களுக்குத் தீர்ப்புச் சொல்ல வேண்டும். ஒன்று உரிமைப் பிரச்சினை சம்பந்தப்பட்டது. நாங்கள் கொடுத்திருக்கிற உரிமைப் பிரச்சினை.